DEPOSITION OF WITNESS
IN THE COURT OF SPECIAL COURT FOR TRIAL OF CASES REGISTERED
UNDER SC/ST(POA)ACT, 1989, RAMANATHAPURAM
**Spl.Sessions Case No.48/2023**

அ.சா.1

Prosecution witness

| | | | |
|---|---|---|---|
| Name: | நந்தகுமார் | Caste: | |
| Father's Name: | சுப்பிரமணி | Calling: | டிரைவர் |
| Village: | முதலூர் | Religion: | |
| Taluk: | பரமக்குடி | Age: | 23 |

Solemnly affirmed in accordance with the provisions no of Act X of 1873 of the day of 02.02.2026

( எதிரி ஆஜர் இல்லை .BNSS பிரிவு 355-ன் கீழ் மனு அனுமதிக்கப்பட்டுள்ளது.)

**முதன்மை விசாரணை**

நான் பரமக்குடி தாலுகா முதலூர் கிராமத்தில் வசித்து சொந்தமாக டாடா ஏசி வாகனம் ஓட்டி தொழில் செய்து வருகிறேன். நான் பட்டியல் இனத்தை சேர்ந்த இந்து தேவேந்திர குல வேளாளர் சமூகத்தை சார்ந்தவன். எதிரியை தெரியும். அவர் சீர்மரபினர் வகுப்பை சேர்ந்த மறவர் சமூகத்தை சார்ந்தவர். சா.ப.சா.2 பாக்கியம் எனது ஆச்சி. சா.ப.சா.3 ராமசாந்தி, சாட்சி சந்திராதேவி இருவரும் பக்கத்து வீட்டுக்காரர்கள். 16.07.2023 க்கு இரண்டு மாதங்களுக்கு முன்பு எனது அம்மா இறந்துவிட்டார். எனது அப்பா கை, கால் ஊனமுற்றவர். எனது தம்பி தேவா எங்களோடு இருந்து கூலி வேலை பார்த்து வருகிறார். எனது ஆச்சி பாக்கியம் எங்களோடு இருந்து சமைத்து தருகிறார். என் வீட்டிற்கு முன்பாக ரோட்டு ஓரமாக சின்ன பெட்டிக்கடை வைத்து வியாபாரம் செய்து வருகிறோம். 16.07.2023 ம் தேதி இரவு 09.30 மணியளவில் எங்க ஊரை சேர்ந்த

பரமசாமி மகன் மகேஷ் என்பவர் நான் கடையில் உட்கார்ந்திருந்தபோது சிகரெட் கேட்டு வந்தார். நான் சிகரெட் எடுத்து கொடுத்துவிட்டு சிகரெட்டுக்குரிய பணத்தை கொடுங்கள் என்று கேட்டேன். அப்போது எதிரி நான் ஏன் பணம் தரவேண்டும் பள்ள புண்டை மகனே, தேவுடியா மகனே என்று ஆபாசமாக பேசினார். நான் வெளியே வந்து பணத்தை கொடுங்கள் என்று கேட்டபோது எதிரி முதுகில் மறைத்து வைத்திருந்த அருவாளை எடுத்து என்னை வெட்ட வந்தார். நான் விலகிக்கொண்டேன். அருகில் இருந்த எனது ஆச்சி முதுகில் பட்டு என் ஆச்சியின் சட்டை கிழிந்துவிட்டது. அவருக்கு சிறிய காயம் ஏற்பட்டது. அப்போது என் ஆச்சி சத்தம் போட்டதும் பக்கத்தில் இருந்த ராமசாந்தி, சந்திராதேவி ஆகியோர் வந்தார்கள். அவர்கள் வரவும் எதிரி என்னை பார்த்து நான் கேட்கும்போதெல்லாம் சிகரெட் தரவேண்டும், சிகரெட் தரவில்லை என்றால் அவர் அருவாளை காட்டி இதாலேயே வெட்டி கொன்றுவிடுவேன் என்று மிரட்டிவிட்டு சென்றுவிட்டார். எனது ஆச்சிக்கு காயம் பெரியதாக இல்லாததால் நாங்கள் மருத்துவமனைக்கு செல்லவில்லை. அதுமட்டுமல்லாமல் எங்கள் ஊரில் நாங்கள் எங்கள் சாதியை சேர்ந்தவர்கள் 44 குடும்பங்கள் மட்டுமே உள்ளோம். எதிரியின் மறவர் சாதியை சேர்ந்தவர்கள் சுமார் 400 குடும்பங்கள் வசிப்பதால் பயந்துகொண்டு இரவு நேரமாக இருப்பதால் காவல்நிலையம் சென்று புகார் கொடுக்கவில்லை. மறுநாள் 17.07.2023 ம் தேதி காலை 9.00 மணியளவில் சத்திரக்குடி காவல்நிலையம் சென்று புகார் மனு கொடுத்தேன். என்னிடம் காட்டப்படும் புகார் மனுவில் உள்ள கையெழுத்து என்னுடையதுதான். புகார் மனுவை நான் தான் எழுதினேன். அந்த புகார் மனு **அ.சா.ஆ.1**.

இதுசம்பந்தமாக பரமக்குடி காவல்துணைக் கண்காணிப்பாளர் என்னை விசாரித்தார்.

<u>எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை:–</u>

நாங்கள் வைத்துள்ள கடை பெரிய கடை என்றால் சரிதான். அந்த கடையில் அனைத்து சமுதாய மக்களும் பொருட்கள் வாங்குவார்கள் என்றால் சரிதான். பெரும்பாலும் கடையில் என் அப்பாதான் இருப்பார் என்றால் சரிதான். புகாரிலோ டிஎஸ்பியிடம் அளித்த வாக்குமூலத்திலோ எதிரி எத்தனை சிகரெட்டுகள் கேட்டார், என்ன சிகரெட் கேட்டார் என்று குறிப்பிட்டு சொல்லவில்லை என்றால் சரியல்ல. நான் சொன்னதுபோல் எதிரி என் கடைக்கு சிகரெட் வாங்க வரவில்லை என்றும், சிகரெட் கேட்கவில்லை என்றும் அதனால்தான் டிஎஸ்பியிடமோ புகாரிலோ என்ன சிகரெட் கேட்டார் என குறிப்பிட்டு சொல்லவில்லை என்றால் சரியல்ல. என்னுடைய புகாரிலோ வாக்குமூலத்திலோ எதிரி வைத்திருந்த அருவாள் எவ்வளவு நீளம், கைப்பிடி என்ன வகையிலானது போன்ற விவரங்களை சொல்லவில்லை என்றால் சரியல்ல. எனக்கும் எதிரிக்கும் பிரச்சனை நடந்தபோது என் ஆச்சி எங்கிருந்தார் என்றால் கடையின் முன்புறம் உட்கார்ந்திருந்தார். அருவாள் போன்ற ஆயுதத்தை வைத்து ஓங்கி வெட்டும்போது மிகப்பெரிய காயம் ஏற்படும் என்றும் எதிரி அருவாளை கொண்டு வந்து எங்களை வெட்ட முயற்சிக்கவில்லை என்றும் அதனால்தான் எங்களுக்கு எந்த காயங்களும் ஏற்படவில்லை என்று சொன்னால் சரியல்ல. என் ஆச்சியின் ஜாக்கெட் கிழிந்துவிட்டது. என் ஆச்சி அணிந்திருந்த ஜாக்கெட்டை நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை என்றும் அவர் என்ன நிறத்திலான ஜாக்கெட் அணிந்திருந்தார் என குறிப்பிட்டு சொல்லவில்லை என்றும் சொன்னால்

சரிதான். காவல்நிலையத்தில் கிழிந்த ஜாக்கெட்டை ஒப்படைத்தேனா என்றால் கேட்கவில்லை என்பதால் ஒப்படைக்கவில்லை. உண்மையாகவே ஜாக்கெட் கிழிந்திருந்தால் ஒப்படைத்திருப்பேன் என்றும் அப்படி சம்பவம் எதுவும் நடக்கவில்லை என்றும் சொன்னால் சரியல்ல. என் தம்பி தேவா மீது திருட்டு போன்ற பல்வேறு குற்ற வழக்குகள் நீதிமன்றத்தில் நிலுவையில் உள்ளது என்றால் பல்வேறு வழக்குகள் இல்லை, ஒரே ஒரு திருட்டு வழக்கு மட்டும் உள்ளது. அதேபோல எதிரியின் அண்ணன் இராமர் என்பவர் கொடுத்த புகாரின் பேரில் கு.எண். 78/2023 வழக்கு பதிவு செய்யப்பட்டு அதன்படி பிரிவுகள் 294(b), 506(i) IPC ன் கீழ் குற்றம் சுமத்தப்பட்டுள்ளது என்றால் சரிதான். என் தம்பி மீது எதிரியும் அவரது அண்ணனும் புகார் கொடுத்ததால் அதற்கு பதிலிடையாக நான் எதிரி மீது பொய்யாக வழக்கு புகாரை கொடுத்துள்ளேன் என்றால் சரியல்ல. சம்பவம் நடந்ததாக சொல்லப்படும் 16.07.2023 ம் தேதி என் தம்பி தேவா மற்றும் இரண்டு நபர்கள் எதிரியின் அண்ணனின் இருசக்கர வாகனத்தை திருடிசென்றதாகவும் அதன்பேரில் கொடுக்கப்பட்ட புகாருக்காக பதிலிடையாக நான் பொய்யான புகார் கொடுத்து அதற்கு ஆதரவாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. எங்கள் ஊரை சுற்றி காவனூர், குளத்தூர், துரத்தியேந்தல், வைரவனேந்தல் போன்ற ஊர்களில் எங்கள் சமுதாய மக்கள்தான் அதிகம் வசிக்கிறார்கள் என்றால் சரிதான். அதனால் எதிரிக்கு பயந்துகொண்டு புகார் கொடுக்கவில்லை என்று சொல்வது உண்மைக்கு மாறாக உள்ளது என்றால் சரியல்ல. எதிரி சாதியை சொல்லி திட்டவில்லை என்றும் ஒற்றுமையாக உள்ள ஊரில் நானும் என் தம்பியும் சாதி பிரச்சனை உருவாக்குகிறோம் என்றால் சரியல்ல. இந்த வழக்கிற்கும் எதிரிக்கும் எந்த சம்பந்தமும் இல்லை

என்றால் சரியல்ல. நான் சொன்ன தேதி, நேரத்தில் புகார் எதுவும் கொடுக்கவில்லை என்றால் சரியல்ல. புகாரிலும் வாக்குமூலத்திலும் எங்களுக்கு காயங்கள் ஏற்படவில்லை என்று கூறிவிட்டு தற்போது என் ஆச்சிக்கு சிறிய காயம் ஏற்பட்டதாக பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

C MOHAN RAM
Digitally signed by C MOHAN RAM
Date: 2026.01.02 15:06:07 +0530

Sessions Judge,
Special Court for Trial of Cases Registered under SC/ST(POA) Act,
Ramanathapuram.(FAC)

DEPOSITION OF WITNESS
IN THE COURT OF SPECIAL COURT FOR TRIAL OF CASES REGISTERED
UNDER SC/ST(POA)ACT, 1989, RAMANATHAPURAM
**Spl.Sessions Case No.48/2023**

அ.சா.2

Prosecution witness

| | | | |
|---|---|---|---|
| Name: | பாக்கியம் | Caste: | |
| Father's Name: | உலகநாதன் | Calling: | |
| Village: | பெருங்கலூர் இருப்பு முதலூர் | Religion: | |
| Taluk: | பரமக்குடி | Age: | 70 |

Solemnly affirmed in accordance with the provisions no of Act X of 1873 of the day of 02.02.2026

( எதிரி ஆஜர் இல்லை .BNSS பிரிவு 355-ன் கீழ் மனு அனுமதிக்கப்பட்டுள்ளது.)

**<u>முதன்மை விசாரணை</u>**

நான் பரமக்குடி தாலுகா முதலூர் கிராமத்தில் என் கணவர் இறப்பிற்கு பின்பு மகள் வீட்டில் வசித்து வருகிறேன். என் மருமகன் பெட்டிக்கடை வைத்துள்ளார். என் மருமகனுக்கு ஒரு கை, ஒரு கால் இல்லை. அ.சா.1 நந்தகுமார் என் மகள் வழி பேரன். நாங்கள் பட்டியல் இனத்தை சேர்ந்த இந்து தேவேந்திர குல வேளாளர் சமூகத்தை சார்ந்தவர்கள். எதிரியை தெரியும். அவர் சீர்மரபினர் வகுப்பை சேர்ந்த மறவர் சமூகத்தை சார்ந்தவர். சா.ப.சா.3 ராமசாந்தி, சாட்சி சந்திராதேவி இருவரும் பக்கத்து வீட்டுக்காரர்கள். 16.07.2023ம் தேதி இரவு 09.30மணியளவில் நான் சாப்பிட்டுவிட்டு கடைக்கு முன்பாக உட்கார்ந்திருந்தேன். அப்போது கடையில் என் பேரன் நந்தகுமார் இருந்தான். எங்க ஊரை சேர்ந்த பரமசாமி மகன் மகேஷ் என்பவர் கடைக்கு முன்பு வந்து நின்று கடையில் இருந்த நந்தகுமாரிடம் சிகரெட்

கேட்டார். என் பேரன் சிகரெட் எடுத்து கொடுத்துவிட்டு சிகரெட்டுக்குரிய பணத்தை கொடுங்கள் என்றும் பாக்கியாக இருக்கு அதையும் கொடுங்கள் என்று கேட்டான். அப்போது எதிரி என் பேரன் நந்தகுமாரை பார்த்து பள்ள புண்டை மகனே, தேவுடியா மகனே உனக்கு ஏன் பணம் தரவேண்டும் என்று ஆபாசமாக பேசினார். அப்போது எனது பேரன் நந்தகுமார் கடையில் இருந்து கீழே இறங்கி ரோட்டிற்கு வந்தார். அப்போது எதிரி நந்தகுமார் தன் முதுகில் மறைத்து வைத்திருந்த அருவாளை எடுத்து என் பேரனை வெட்ட வந்தார். என் பேரன் விலகிக்கொண்டேன். நான் தடுக்க போகும்போது எனது முதுகில் பட்டு என் சட்டை கிழிந்துவிட்டது. எனக்கு ஊைக்காயம் ஏற்பட்டது. சத்தம் கேட்டு பக்கத்தில் இருந்த ராமசாந்தி, சந்திராதேவி ஆகியோர் வந்தார்கள். அவர்கள் வரவும் எதிரி என் பேரனை பார்த்து நான் கேட்கும்போதெல்லாம் சிகரெட் தரவேண்டும், சிகரெட் தரவில்லை என்றால் அவர் அருவாளை காட்டி இதாலேயே வெட்டி கொன்றுவிடுவேன் என்று மிரட்டிவிட்டு சென்றுவிட்டார். எனக்கு காயம் பெரியதாக இல்லாததாலும் எங்களுக்கு ஆதரவு இல்லாததாலும் நாங்கள் மருத்துவமனைக்கு செல்லவில்லை. மறுநாள் 17.07.2023 ம் தேதி காலை 9.00 மணியளவில் சத்திரக்குடி காவல்நிலையம் சென்று என் பேரன் புகார் மனு கொடுத்தான். சத்திரக்குடி போலிசார் இதுசம்பந்தமாக வழக்கு பதிவு செய்தததை கேள்விப்பட்டேன். இதுசம்பந்தமாக பரமக்குடி காவல்துணைக் கண்காணிப்பாளர் என்னை விசாரித்தார்.

<u>எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை:—</u>

என் மருமகன் வைத்துள்ள கடை பெரிய கடை என்றால் சரிதான். அந்த கடையில் அனைத்து சமுதாய மக்களும் பொருட்கள் வாங்குவார்கள் என்றால் சரிதான். என் பேரன் தேவா மீது எதிரியும் எதிரியின் அண்ணனும்

16.07.2023 ம் தேதி கொடுத்த புகாருக்கு பதிலிடையாக பொய் புகார் கொடுத்தார் என்றும் சொன்னால் சரியல்ல. என் பேரன் போகவும் இல்லை, பைக்கை திருடவும் இல்லை . பெரிய அருவாளை கொண்டு வெட்டினால் பெரிய காயம் ஏற்படும், ஊமைக்காயம் ஏற்படாது என்றும் சொன்னால் சரியல்ல. நான் சொன்ன மாதிரி காயங்கள் இருந்திருந்தால் அரசு மருத்துவமனைக்கு சென்றிருப்பேன் என்றும் அப்படி எதுவும் காயங்கள் இல்லை என்றும் சொன்னால் சரியல்ல. என் கடைக்கு எதிரில் பண்டாரம் என்ற பழனி என்பவர் வீடு உள்ளது என்றால் சரிதான். சம்பவத்தின்போது அவர் இருந்தார் என்றால் அவர் உறங்கிவிட்டார். ராமசாந்தி, சந்திராதேவி எங்கள் உறவினர்கள் என்றால் சரிதான். இரத்த உறவு இல்லை. ராமசாந்தி, சந்திரா தேவி ஆகியோர் வீடுகள் எங்கள் கடைக்கு சற்று தள்ளிதான் உள்ளது என்றால் சரிதான். சத்தம் கேட்டுதான் வந்தார்கள். உண்மையில் சத்தம் கேட்டிருந்தால் அருகில் இருந்த பண்டாரம் என்பவர் வந்திருப்பார் என்றும் அப்படி சத்தம் கேட்காததால் வெளியே வரவில்லை என்றும் சொன்னால் சரியல்ல. வழக்கின் சொத்தான அருவாள், ஜாக்கெட் ஆகியவற்றை காவல்நிலையத்தில் ஒப்படைக்கவில்லை என்றால் சரியல்ல. என் பேரன் தேவா மீது உள்ள வழக்கை வாபஸ் வாங்குவதற்காக பொய்யாக சாதி பெயரை சொல்லி திட்டியதாக வழக்கு பதிவு செய்தோம் என்றால் சரியல்ல. இந்த வழக்கிற்கும் எதிரிக்கும் எந்த சம்பந்தமும் இல்லை என்றால் சரியல்ல.

C MOHAN RAM

Digitally signed by C MOHAN RAM
Date: 2026.01.02 15:06:15 +0530

Sessions Judge,
Special Court for Trial of Cases Registered under SC/ST(POA) Act,
Ramanathapuram.(FAC)

DEPOSITION OF WITNESS

IN THE COURT OF SPECIAL COURT FOR TRIAL OF CASES REGISTERED UNDER SC/ST(POA)ACT, 1989, RAMANATHAPURAM

**Spl.Sessions Case No.48/2023**

அ.சா.3

Prosecution witness

| | | | |
|---|---|---|---|
| Name: | ராமசாந்தி | Caste: | |
| Husband Name: | மோகன் என்ற கண்ணன் | Calling: | |
| Village: | முதலூர் | Religion: | இல்லத்தரசி |
| Taluk: | பரமக்குடி | Age: | 30 |

Solemnly affirmed in accordance with the provisions no of Act X of 1873 of the day of 02.02.2026

( எதிரி ஆஜர் இல்லை .BNSS பிரிவு 355–ன் கீழ் மனு அனுமதிக்கப்பட்டுள்ளது.)

**முதன்மை விசாரணை**

நான் பரமக்குடி தாலுகா முதலூர் கிராமத்தில் வசித்து வருகிறேன். அ.சா.1 நந்தகுமார், அ.சா.2 பாக்கியம் ஆகியோர்களை தெரியும். அவர்கள் பக்கத்து வீட்டுக்காரர்கள். அ.சா.1 நந்தகுமார் வீட்டின் முன்பாக சிறிய பெட்டிக்கடை வைத்துள்ளார். நாங்கள் பட்டியல் இனத்தை சேர்ந்த இந்து தேவேந்திர குல வேளாளர் சமூகத்தை சார்ந்தவர்கள். எதிரியை தெரியும். அவர் சீர்மரபினர் வகுப்பை சேர்ந்த மறவர் சமூகத்தை சார்ந்தவர். 16.07.2023ம் தேதி இரவு 09.30 மணியளவில் நான் வீட்டில் இருந்தேன். அப்போது நந்தகுமார் வைத்துள்ள பெட்டிக்கடையில் இருந்து சத்தம் கேட்டது. நான் அங்கு ஓடிவந்தேன். எனக்கு பின்பாக பக்கத்து வீட்டை சேர்ந்த சந்திராதேவியும் ஓடிவந்தார். நந்தகுமார் கடைக்கு முன்பாக மகேஷ் அருவாளோடு நின்றுகொண்டிருந்தார். அப்போது நான் கேட்கும்போதெல்லாம் சிகரெட் தரவேண்டும் என்று மகேஷ்

நந்தகுமாரிடம் சொல்லிக்கொண்டிருந்தான். சிகரெட்டுக்கு பணம் கேட்டால் உன்னை அருவாளால் வெட்டிவிடுவேன் என்று சொல்லி விட்டு ஓடிவிட்டான். நான் அங்கிருந்த நந்தகுமாரிடம் என்ன பிரச்சனை என்று கேட்டேன். அப்போது நந்தகுமாரின் பாட்டியின் சட்டை கிழிந்திருந்தது. நான் என்ன என்று கேட்டபோது, மகேஷ் கடையில் சிகரெட் கேட்டார், சிகரெட் கொடுத்துவிட்டு பணம் கேட்டபோது பள்ள புண்டை மகனே, தேவுடியா மகனே என்றும் என்னிடம் எப்படி பணம் கேட்பாய் என்று ஓங்கி வெட்ட வந்ததாகவும், அப்போது நந்தகுமார் விலகிக்கொண்டதாகவும் குறுக்கே வந்த நந்தகுமாரின் பாட்டி ஜாக்கெட்டில் பட்டு கிழிந்துவிட்டதாகவும் சொன்னார். மறுநாள் காலை 17.07.2023 ம் தேதி நந்தகுமாரும் அவரது பாட்டி பாக்கியமும் சத்திரக்குடி காவல்நிலையம் சென்று நந்தகுமார் புகார் கொடுத்ததாகவும் அதன்பேரில் மகேஷ் மீது சத்திரக்குடி காவல்துறையினர் வழக்கு பதிவு செய்திருப்பதாகவும் தெரிந்துகொண்டேன். இதுசம்பந்தமாக பரமக்குடி காவல்துணைக் கண்காணிப்பாளர் என்னை விசாரித்தார்.

<u>எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை:-</u>

கடைக்கு அருகில் பழனி என்பவர் வீடும், விலாங்கார் என்பவர் வீடும் உ ள்ளது என்றால் சரிதான். என் வீடு கடைக்கு மேற்கே உள்ளது. பழனி வீட்டிற்கு அடுத்தாற் போல் உள்ளது என்றால் சரியல்ல. கடைக்கு எதிரே பழனி வீடும், பழனி வீட்டிற்கு மேற்கே என் வீடு தள்ளி உள்ளது என்றால் மேற்கே உள்ளது, ஆனால் தள்ளி இல்லை. சத்தம் கேட்டு பழனியோ அவரது மனைவியோ வரவில்லை என்றால் சரிதான். அதேபோல் விலாங்காரும் அவரது மனைவியும் வரவில்லை என்றால் சரிதான். நான் சொன்னதுபோல் சத்தம் கேட்டு சம்பவம் நடைபெற்றிருந்தால் பழனியும் விலாங்காரும் சம்பவ இடத்திற்கு வந்திருப்பார்கள் என்றும் இல்லை

என்பதால்தான் வரவில்லை என்றால் சரியல்ல. நான் முதல்விசாரணையில் சொன்னதுபோல் நான் பார்க்கும்போது எதிரி சிகரெட் கேட்டு பணம் கேட்டால் வெட்டுவேன் என சொன்னதாக சொன்னார் என போலிஸ் விசாரணையில் சொல்லவில்லை என்றால் சரியல்ல. சம்பவம் நடந்ததாக சொல்லப்படும் 16.07.2023ம் தேதி இரவு 9.30 மணியளவில் எதிரியும் எதிரியின் அண்ணனும் நந்தகுமாரின் தம்பி தேவா பைக்கை திருடிவிட்டதாகவும், ஏன் திருடினாய் என்று கடைக்கு வந்து கேட்டதற்கு அருவாளை காட்டி உன்னை கொன்றுவிடுவேன் என்று நந்தகுமாரின் தம்பி மிரட்டினார் என்று சொன்னால் சரியல்ல. எதிரியின் அண்ணன் கொடுத்த புகாரின் பேரில் நந்தகுமாரின் தம்பி மீது சத்திரக்குடி காவல்நிலையத்தில் கு.எண். 78/2023 என வழக்கு பதிவு செய்யப்பட்டுள்ள விவரம் தெரியுமா என்றால் தெரியாது. நந்தகுமார் எனக்கு உறவினர் என்பதால் அவர் கொடுத்த பொய்யான புகாருக்கு ஆதரவாக பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்று சொன்னால் சரியல்ல. இந்த வழக்கிற்கும் எதிரிக்கும் எந்த சம்பந்தமும் இல்லை என்றால் சரியல்ல.

C MOHAN RAM
Digitally signed by C MOHAN RAM
Date: 2026.01.02 15:06:23 +0530

Sessions Judge,
Special Court for Trial of Cases Registered under SC/ST(POA) Act,
Ramanathapuram.(FAC)